

தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை மேம்பாலப் பணிகள் போக்குவரத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், நள்ளிரவில் மட்டும் இரும்பு உத்திரங்கள் பொருத்தும் பணியினை 13.10.2025 அன்று நள்ளிரவில் அமைச்சர் எ.வ.வேலு பணித்தளத்திற்குச் சென்று ஆய்வு செய்தார். உடன் தலைமை பொறியாளர் கு.கோ.சத்தியபிரகாஷ், தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவண செல்வம் மற்றும் ஒப்பந்த நிறுவனத்தினர் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (14.10.2025) அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில், பொங்கல் 2026 வேட்டி சேலை வழங்கும் திட்டம்,பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் துறைச் சார்ந்த திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துறை அரசு செயலாளர், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை, தேனாம்பேட்டை – சைதாப்பேட்டை மேம்பாலப் பணிகள்!

# நள்ளிரவில் பொருத்தப்பட்ட இரும்பு உத்திரங்கள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

சென்னை, அக்.16 -

சென்னை, அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அரசு திட்டமிட்டு, தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, மேம்பாலம் கட்டும் பணியைத் துவக்கி, தற்போது, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மேம்பாலத்தில் இரும்பு உத்திரங்கள் பொருத்தும் பணிகள், போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் மேற்கொள்ள வேண்டும் என்ற அமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 13.10.2025 அன்று நள்ளிரவில் பணிகள் தொடங்கியது. அமைச்சர் அவர்கள் பணித் தளத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆலோசனைகளை வழங்கினார்.

3.20 கி.மீ. நீளமுடைய இந்த மேம்பாலத்தில் அடித்தளப் பணிகளும், இரும்புத் தூண்கள் அமைக்கும் பணிகளும் ஏற்கெனவே நிறைவு பெற்ற நிலையில், மேம்பாலக் கட்டுமானத்தில் மிக முக்கியமான கட்டமாக கருதப்படும் இரும்பு குறுக்கு உத்திரங்கள் (Steel Cross Girder) பொருத்தும் பணி நேற்று, நள்ளிரவில் தொடங்கியது. ஒவ்வொரு உத்திரமும் 22 டன் எடையுடையது. குறுக்கு உத்திரம் (Cross Girder) 9 டன் எடை கொண்டது.

ஒரு பாலக்கண்ணுக்கு (Span) 5 உத்திரங்கள் மற்றும் 2 குறுக்கு உத்திரங்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு பாலக்கண்ணில் மொத்தம் 110 டன் எடையுள்ள இரும்பு கட்டமைப்பு அமைக்கப்படும். இவ்வளவு பருமனான இரும்பு உத்திரங்களை தூக்குவதற்காக 150 டன் கொள்ளளவு கொண்ட உயர்திறன் கிரேன்கள் பயன்படுத்தப்பட்டு வெற்றிக்கரமாக பொருத்தப்பட்டு வருகின்றன.

இப்பணிகளின் முன்னேற்றத்தை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நள்ளிரவில் பணித்தளத்தில் நீண்ட நேரம் பார்வையிட்டார்.

இந்த உயர்மட்ட மேம்பாலப் பணிகள் நிறைவு பெற்றவுடன் தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை இடையே யான போக்குவரத்து நெரிசல் குறையும். வாகனங்கள் விரைவாக செல்வதுடன் பயண நேரம் குறையும்.

அமைச்சர் நேரடி ஆய்வின்போது, நெடுஞ்சாலைத் துறை தலைமை பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கு.கோ.சத்திய பிரகாஷ், நெடுஞ்சாலைத் துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் வி.சரவணசெல்வம் மற்றும் ஒப்பந்த நிறுவனத்தினர் உடனிருந்தனர்.

### நடப்பு உலகளாவிய வர்த்தகச் சூழல் தெரியாமல்

# நடிக்கும் அன்புமணிக்கு நாம் எதையும் சொல்ல முடியாது!

## தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கண்டனம்!

சென்னை, அக்.16 -

தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு :-



தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு எப்போதெல்லாம் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டு நல்லது நடக்கிறதோ அப்போதெல்லாம் சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணத்தினால் அந்த வேலைவாய்ப்பில் விளையாடுவதை வாடிக்கையாக வைத்துள்ளனர். அப்படி ஒருவர் தனது குடும்பச் சண்டையில் உள்ள வன்மத்தை தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலத்தில் கொட்டித் தீர்க்கிறார்.

இன்றைய உலக அரசியல் சூழலில் ஒரு முதலீட்டை இந்தியாவிற்குள் கொண்டுவருவது எவ்வளவு கடினம் ! அதிலுள்ள Geopolitical issues என்னென்ன என்பதையெல்லாம் அறிந்துகொள்ளாமல் அரசியல் காழ்ப்புணர்ச்சி மிகுந்த சிறுபிள்ளைத்தனமான அறிக்கையை வெளியிடுவதை இனி அவர் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

நேற்று பாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் 15,000 கோடி முதலீடு செய்து 14,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்தது என்பது உறுதியான, சரியான, எந்தவிதத் தவறும் இல்லாத 100/100 உண்மையான செய்தி. இது ஏறத்தாழ ஒரு வருடப் போராட்டத்திற்கு பிறகு உறுதி ஆகியிருக்கும் வேலைவாய்ப்புகள். பல மாதங்களாக ஒரு சில ஊடகங்கள் அரசு எந்தவித MoU செய்தியையும் உறுதி செய்யாத சூழலில் அவர்களாக யூகித்து எழுதிய செய்திகளை பழைய திட்டம் என்று கூறுவது ஏற்புடையதல்ல. ஒரு திட்டம் வேலை வாய்ப்புகளாக மாறும் என்று அரசுக்கு முழுமையான நம்பிக்கை வந்த பிறகே அதை துறையோ அல்லது நானோ உறுதி செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம்.

நடப்பு உலகளாவிய வர்த்தகச் சூழல் தெரியாமல் யார் எதற்காக எதைச் சொல்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளாமல், அல்லது புரிந்துகொள்ள முடியாமல், அல்லது புரிந்து கொண்டே நடிப்பவர்களுக்கு நாம் எதையும் சொல்ல முடியாது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் மாவட்டம்

# நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் கிராம சபைக் கூட்டம்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், அக். 16 –

நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட மங்களபுரம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே தமிழக முதல்வரின் கிராமங்கள் தோறும் கிராம சபை கூட்டம் காணொலிக் காட்சி தொடங்கி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டு அறிந்தார். மேலும் பொது மக்கள் இடத்தில் மனுக்களை பெற்று கடந்த தமிழக அரசின் நலத்திட்டங்கள், தமிழக முதல்வரின் பல்வேறு சிறப்பு மிகு திட்டங்கள் குறித்தும் பொதுமக்களிடத்தில் எடுத்து கூறினார். தொடர்ந்து இந்த அரசு மக்களுக்காக பல்வேறு அரசு நலத் திட்டங்களை வழங்கி வருகிறது அதனை பொதுமக்கள் பயன்படுத்தி நீங்கள் சிறப்பாக வாழ்க்கை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், ஒன்றிய கழகச் செயலாளருமான கே.பி. ராமசுவாமி, திட்ட இயக்குனர் கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம ஊராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் சட்டமன்ற தொகுதி ஓசூர் ஊராட்சி ஒன்றியம் கொத்த கொண்டப்பள்ளி ஊராட்சியில் கனிமங்கள் மற்றும் குவாரிகள் நிதியிலிருந்து அத்திப்பள்ளி இராயக்கோட்டை சாலை முதல் திருப்பதி வேலி வரை சுமார் 47 இலட்சத்து 55 ஆயிரம் மதிப்பில் தார்ச்சாலை அமைப்பதற்கு பணிகளை மேற்கு மாவட்ட செயலாளர் ஓய்.பிரகாஷ் துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர் .

# நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் விலையில்லா வேட்டி,சேலை!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், அக். 16 -

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நியாய விலைக்கடையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தீபாவளி திருநாளை முன்னிட்டு கூட்டுறவுத்துறையின் சார்பில் இராசிபுரம் வட்டத்தைச் சேர்ந்த 22,264 பயனாளிகளுக்கு இலவச வேட்டி, சேலைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இராஜேஸ்குமார் எம்.பி. தெரிவித்தாவது:

தமிழ்நாடு முதல மைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். மேலும், வருவாய்த்துறை சார்பில், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளி உதவித் தொகை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம், இலங்கை அகதிகள் மாற்றுத்திறனாளி உதவித்தொகை உள்ளிட்ட உதவித்தொகைகள் பெறும் பயனாளிகளுக்கு கூட்டுற வுத்துறையின் சார்பில் தீபாவளித் திருநாளை முன்னிட்டு விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கப் பட உள்ளது.

அந்த வகையில், இராசிபுரம் நியாய விலைக் கடையில் 22,254 நபர்களுக்கு வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டுள்ளது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் நகர் மன்றத் தலைவர் கவிதா சங்கர், கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் க.பா. அருளரசு மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டத்தில் கடும் மழை!

## கழகத்தினர் நிவாரணப் பணி!

நீலகிரி, அக். 16 -

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையின் காரணமாக கடுமையான மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளது நேற்று நள்ளிரவு கடுமையான மழையின் காரணமாக பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

உதகை குன்னூர் தேசிய நெடுஞ்சாலையில் மழைகாரணமாக நிலச்சரிவு ஏற்பட்டது நள்ளிரவு நேரம் என்பதால் போக்குவரத்து குறைந்திருந்த காரணத்தினாலும் மழையின் தர்க்கம் சற்றே தனித்து இருந்த காரணத்தினால் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை

இந்நிலையில் நிலச்சரிவு ஏற்பட்ட உடன் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த நகராட்சி துணைத் தலைவர் வாஷிம் ராஜா நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு தகவல் கொடுத்து உடனடியாக நிலச்சரிவு ஏற்பட்டுள்ள இடத்தில் சாலை சீரமைக்கும் பணியை செய்தனர்.

தொடர்ந்து நகராட்சிக்குட்பட்ட மாடல் ஹவுஸ் பகுதியிலும் நிலச்சரிவு ஏற்பட்டது இதை அடுத்து அந்த நள்ளிரவு நேரத்திலும் குன்னூர் நகராட்சி துணைத் தலைவர் வாஷிம் ராஜா மற்றும் அந்த பகுதியினுடைய கழகத் தோழர்கள் அந்த பகுதிக்கு விரைந்து வந்து மேலும் நிலச்சரிவுகள் ஏற்படாமல் மண் மூட்டைகள் அடுக்கி மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக முடக்கி விட்டார்.

இதன் காரணமாக நள்ளிரவில் ஏற்பட்ட இந்த சேதங்கள் நகராட்சி துணைத் தலைவர் எடுத்த நடவடிக்கையின் காரணமாக அதிகாலை முடிக்கப்பட்டன இதனால் காலை 8 மணி முதல் போக்குவரத்து சீரானது.

நள்ளிரவு நேரத்திலும் கூட பேரிடர் காலத்தில் மக்களுக்கு ஏற்படும் அபாயத்திலிருந்து காப்பாற்றிய நகராட்சி துணைத் தலைவர் வாஷிம் ராஜா உள்ளிட்ட கழகத் தோழர்களுக்கு பொதுமக்கள் பாராட்டுகளை தெரிவித்தனர்.

இதற்கிடையே இன்று காலை குன்னூர் நகராட்சி அலுவலகத்தில் துணைத் தலைவர் வாஷிம் ராஜா உடனடியாக அதிகாரிகளுக்கு பேரிடர் காலத்தில் ஏற்படும இடையூறுகளை தடுக்கும் விதமாக புரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நகராட்சி அலுவலகத்தில் தயாராக வைத்திருக்கும் படியும் மேற்கொண்டு ஏதேனும் இழப்புகள் ஏற்படாதவாறு அனைவரும் விழிப்புடன் பணியாற்றிட நடவடிக்கை எடுக்கும் படி அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்..

அவருடன் கவுன்சிலர் மணி, சிக்கந்துூர் பத்மநாதன் உள்ளிட்ட கழகத்தினர் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் வடக்கு ஒன்றியம் டி.பெருமாம்பாளையம் ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் மோட்டூரில் உள்ள திருமண மண்டபத்தில் நடந்தது. இதை வட்டார வளர்ச்சி அலுவலர் குணலட்சுமி தொடங்கி வைத்தார். அருகில் ஒன்றிய தி.மு.க. செயலாளர் ரத்தினவேல், தலைமை செயற்குழு உறுப்பினர் சங்கர் (எ) சாமிநாதன், பொருளாளர் பழனிவேல், துணை செயலாளர்கள் ஆறுமுகம், செந்தில், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் யுவராஜ், சுப்பிரமணி, சக்திவேல், செல்வராணி ஆறுமுகம், இளைஞரணி அமைப்பாளர் கார்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டம், இடையர்பாளையம் பகுதி, 35 வது வார்டில் தூய்மைப் பணியாளர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பரிசுப் பொருட்களை, பகுதி கழகப் பொறுப்பாளர் மதியழகன் முன்னிலை வகிக்க, வட்ட அவைத் தலைவர் சோ.துரைப் பாண்டியன் தலைமை யில், வட்டச் செயலாளர் ஆர். குமரேசன் துவக்கி வைக்க, மாமன்ற உறுப்பினர் நா.சம்பத் ஏற்பாட்டில் வழங்கப் பட்டது. இந்நிகழ்வில் திருமதி கண்ணகி, நடராஜன், பாலசுப்ர மணியன், மேஸ்திரி செல்வம், சதீஷ், சுப்பிரமணியன், டி.மணி மற்றும் பலர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் நா. குப்புசாமி
### அக்டோபர் 16 (1994)



இளமைக்காலம் முதல் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்டப் பொறுப்பாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1974ல் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் தஞ்சையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் முன்னிலை வகித்தார். அதோடு தனது பகுதியில் தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத்தை செய்தவர்.

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த இவர் சிறந்த வழக்கறிஞராகவும் பணியாற்றியவர்.

கழகத் தோழர்களின்மீது தொடுக்கப்பட்ட பல வழக்குகளில் ஆஜராகி அவர்களுக்காக வாதாடியவர்.

கழகம் அறிவித்த விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**